*6*

# தன் தகுதிக்கேற்காத நடத்தையை நிறுத்த வேண்டிய சபை

## (1 கொரிந்தியர் 6:1–20)

*அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரி "தகுதிக்கேற்காத ஒரு செயலை" செய்திருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால், அந்த அதிகாரி அவருடைய அல்லது அந்த பெண்மணியினுடைய பதவி அந்தஸ்துக்கேற்காத தவறைச் செய்ததாக குற்றஞ்சாட்டப் படுவார். அப்படிப் பட்ட "தகுதிக்கேற்காத" நடத்தை ஒரு இராணுவ வீரரின் சீருடைக்கும், அந்தஸ்துக்கும், நாட்டிற்கும் காட்டுகிற மரியாதைக் குறைவாகக் காணப்படுகிறது.*

*அனைத்து கிறிஸ்தவர்களும் தேவனுடைய இராணுவத்தில் போர் வீரர்களே, நாம் கிறிஸ்தவர்களான போது கர்த்தர் நிமித்தம் போராடும்படி நம்மை ஒப்புக் கொடுத்தோம். இராணுவ வீரர்களாக, ஒரு குறிப்பிட்ட ஒழுக்க ரீதியான வாழ்வை வாழ நாம் எதிர்பார்க்கப் படுகிறோம். அப்படிச் செய்ய நாம் தவறும் பட்சத்தில், நாம் கிறிஸ்தவனின் தகுதிக்கேற்காத செயலை செய்த குற்றத்துக்கு ஆளாவோம்.*

*கொரிந்துவிலிருந்த பிரச்சனைகளில் ஒன்று அங்கிருந்த அங்கத்தினர்கள் கிறிஸ்தவனின் தகுதிக்கேற்காத செயல்களில் ஈடுபடுவோராய் இருந்தனர். அதிகாரம் 6ல் பாவ நடத்தைகளில் மூழ்கிப் போகும் போக்கை கண்டித்து எழுதுகிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு ஏற்காத செயல்களில் பங்கு கொள்ளாதபடி அவர்களை அவர் எச்சரித்தார்.[1]*

### சகோதரனுக்கு விரோதமாக சட்டத்தை நாடுதல்

பவுல் பின்வருமாறு துவங்குகிறார்.

> *உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதிக்காரனிடத்தில் போகத் துணிகிறதென்ன? பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப் படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக் கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடாதிருக்கிறது*

எப்படி? இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச் செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள், உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத் தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான்.

நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை ஏன் நஷ்டத்தைப்பொறுத்துக் கொள்வதில்லை? நீங்களே அநியாயஞ் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே (6:1-8).

"சகோதரனுக்கு விரோதமாய் வழக்காடப் போவது" - ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாக அவமரியாதையைக் காட்டுகிறது என்கிறார் பவுல். "நீங்களும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவரானதால், அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்:சகோதரனுக்கு விரோதமாய் வழக்காடும்படி அநீதிக்காரனிடத்தில்[2] போகாதிருங்கள். அப்படிப் போவது வெட்கக் கேடான செயல்" (6:5).

ஒரு சகோதரன் மற்றொருவனுக்கு எதிராக வழக்காடும்படி ஏன் போகக் கூடாது? பவுல் குறிப்பான காரணங்களைக் கொடுத்தார்.

*சபைக்கு அது வெட்கத்தை உண்டு பண்ணும் செயல்.* பவுல் சபைக்கு வெட்கத்தை உண்டுபண்ணும் செயலாகக் குறிப்பிட்டு, சகோதரனுக்கு விரோதமாய் வழக்காட போவதைக் "வெட்கமானது" என்று காட்டுகிறார் (6:5, 6). கிறிஸ்தவர்களுக்கிடையேயான வழக்காடுதல், புறம்பே இருப்பவர்களுக்கு பரியாசம் பண்ண ஒரு காரணமாகி விடும்.

*சபை அங்கத்தினர்கள் தீர்ப்புச் சொல்லத் தகுதியானவர்கள்.* சபை அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடப் போகக் கூடாது, ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ளும் திறமை வாய்ந்தவர்கள் என்று பவுல் குறிப்பிட்டார். சகோதரர்கள் தங்களுக்குள் தாங்களே சரி செய்து கொள்ள, அவிசுவாசிகளை நாடுவதைக் காட்டிலும் வேற்றுமைகளைச் சரி செய்ய ஏதுவான ஒருவரை தங்களுக்குள்ளாகவே ஒருவரை நியமித்து செய்ய வேண்டும் (6:1). பரிசுத்தவான்கள் இப்படிப் பட்டக் காரியங்களை தீர்ப்பு செய்ய வல்லவர்களாயிருக்கின்றனர். ஒரு நாளிலே, பரிசுத்தவான்கள் உலகத்தையும் தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்பார்கள் (6:2, 3). இப்படிப்பட்ட நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்களுடன் ஒப்பிடும் போது இம்மைக்குரிய பொருள் ரீதியான கேள்விகள் அற்பமானவைகள்.[3]

அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் சட்ட ரீதியான வழக்குகளைத் தொடுப்பதன் மூலம் சபைக்கு வெட்கத்தை உண்டு பண்ணுவதால், நாம் வழக்காடு மன்றத்துக்கு போவதை விடுத்து, நமக்குச் சேர வேண்டிய பணத்தை இழப்பதே மேல். நாம் அப்படிப் பட்டவர்களோடு ஒத்துப் போக இயலவில்லை என்று வெளியில் சொல்லித்திரியக் கூடாது (6:7); கிறிஸ்தவர்களாகிய நாம், அன்பானவர்கள் என்று அறியப் பட வேண்டும் (யோவான் 13:35).

*வசனம் 8 மற்றொரு ஆலோசனையைச் சேர்க்கிறது. வழக்கு தொடுக்க காரணமாயிருந்தது என்னவெனில், சபையிலிருந்த யாரோ ஒருவர் மற்றொருவரை ஏமாற்றியோ அல்லது ஏமாற்ற முயற்சியோ பண்ணியிருக்கலாம், இது நிச்சயமாக தவறானது. "பொருளாசைக்காரர்" (6:10) என்று பவுல் பேசுவதற்கு இதுவே அடிப்படையாக இருந்திருக்கலாம். பொருளாசைக்காரர் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்றார்.*

*பவுலின் போதனையை இந்தப் பகுதியில் எப்படிப் பயன்படுத்துவது? இதோ மனதில் கொள்ள வேண்டிய மூன்று நடைமுறை உண்மைகள்:*

*முதலாவதாக, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் வழக்காடப் போவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு சகோதரனுக்கு எதிரான காரியம் எதுவுமிருந்தால், சபையிலிருக்கும் ஒருவரைக் கொண்டு நாம் சரி செய்து கொள்ள வேண்டும் என்ற பவுலின் அறிவுரையை நாம் வினயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாதபோது, நிச்சயமாக நீதியுள்ள தீர்ப்பைக் கொடுக்கக் கூடிய ஒருவர் சபையில் இருப்பார்.*

*இரண்டாவதாக, கிறிஸ்தவர்கள் "யாரையும் மோசம் போக்காமலும் யாருக்கும் தீங்கு செய்யாமலும்" (வசனம் 8) வழக்காடுமளவுக்கு போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்முடைய சகோதரர்களோடு வைத்துக் கொள்ளும் விவகாரங்களில் எப்பொழுதும் சரியானவைகளைச் செய்து நேர்மையாக செயல் பட வேண்டும்.*

*மூன்றாவதாக, வியாபாரத்தில் ஏற்படும் பண நஷ்டத்தைக் காட்டிலும், சில விஷயங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரர்களோடு நமக்கு இருக்கும் பந்தங்கள் பணத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது. அதோடு, சபையின், கிறிஸ்துவின் சரீரத்தின் நற்பெயர் அதி முக்கியமானது. தங்களுடைய "உரிமைகளை" குறிப்பாய் உணர்த்துபவர்கள் - தங்களுக்கு வரவேண்டிய பணத்தை மட்டுமே கேட்பதாக நினைத்து - கர்த்தருடைய சபையின் நற்பெயரைக் கெடுப்பவர்கள் தங்கள் கோணல் புத்தியின் மதிப்பை விளங்கப் பண்ணுகிறார்கள்.*

*நாம் மனதில் வைக்க வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவெனில் ஒரு சகோதரனுக்கு விரோதமாக வழக்காடுதல் அல்லது ஒரு சகோதரனை வஞ்சித்தல் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு முறையற்றவை. அப்படிப்பட்ட நடத்தை கிறிஸ்தவனின் தகுதிக்கு ஏற்காத நடத்தையாகும்.*

## *அநீதியான நடத்தையில் நிலைத்திருத்தல்*

*அடுத்ததாக பவுல் அநீதி எனும் பிரச்சனையின் பல்வேறு வடிவங்களில் பேசுகிறார் (6:9-11). இதன் விளைவாக பவுல், "அஞ்ஞானிகளின் குண நலன்களாகிய அநீதியில் தொடர்ந்து நிலைத்திருப்பது, நீங்கள் யார்என்பதற்கே அவமரியாதையாகும் - கிறிஸ்தவர்கள் பாவிகளாயிருந்து, கழுவப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள். தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை நீங்கள் அறிந்திருக்கிறபடியாலும், முந்தின நடக்கைக்குரியவர்களாய் நீங்கள் இல்லாமலிருப்பதாலும், புதிய ஜனக் கூட்டமாய் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். மாற்றம் பெற்ற உங்கள் நிலைமை உங்களுடைய மாற்றம் பெற்ற நடத்தையில் பிரதிபலிக்கட்டும்" என்கிறார்.*

**“அநியாயக்காரர் பரலோகத்திற்குப் போக மாட்டார்கள்!”**

*தனது நிருபத்தின் இந்தப் பகுதியில் பவுல் “அநியாயக்காரர்” (adikos[4]) “தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை,” என்று துவங்குகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர்கள் பரலோகத்துக்குப் போகமாட்டார்கள் என்கிறார். இந்த எச்சரிக்கையை அவர் ஏன் இந்த இடத்தில் புகுத்தினார்? இதற்கு அநேக காரணங்கள் அவருக்கு இருந்திருக்கலாம்: (1) இப்பொழுது தான் கொரிந்தியர்கள் ஒருவருக்கொருவர் “அநியாயஞ்செய்யக் கூடியவர்களாயும் நஷ்டப்படுத்தக் கூடியவர்களாயும்” இருந்தனர் என்று குறிப்பிட்டிருந்தார் (6:8). (2) ஆரம்பத்தில் வெளிப்படையான ஒழுங்கற்ற பாவத்தைக் கடிந்து கொண்டு அந்த பாவத்தில் குற்றப்பட்டிருந்த சகோதரனைவிட்டு விலகும்படியும் அவர்கள் தெரிந்தும் அப்படிப்பட்ட பாவங்களை அனுமதித்துக் கொண்டிருப்பதையும் குறித்து அவர்களை கண்டித்திருந்தார் (அதிகாரம் 5). (3) தொடர்ந்து அவர் வேசித்தனப் பாவத்தினிமித்தம் அவர்களை எச்சரிக்கிறார். (4) இந்த வசனங்களில் சொல்லப் பட்டுள்ள பாவங்களை செய்கிற குற்றத்திற்குள்ளாகி, பாவ வாழ்க்கைக்கே திரும்பிப் போகிற சோதனைக்குட் படலாம். இந்த எல்லா காரணங்களுக்காகவும், அநியாய நடத்தைகளினிமித்தம் வரும் விளைவுகளையும் குறித்த எச்சரிக்கை அவர்களுக்குத் தேவைப்படுகிறது.*

**“குறிப்பான பாவங்களைச் சுட்டிக் காட்டட்டும்!”**

*அடுத்ததாக, அக்கிரமக்காரர்களை பரலோகத்துக்குப் புறம்பே தள்ளி வைக்கக்கூடிய பாவங்களை அல்லது அவர்களை நரகத்திற்கு அனுப்பக்கூடிய பாவங்களைப் பட்டியலிட்டார். அவர் “வேசி மார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை” என்று எழுதினார் (6:9, 10). இந்த உண்மை அப்படிப்பட்ட நடத்தைகளை கிறிஸ்தவர்கள் தவிப்பதற்கு ஒரு வலிமையான தூண்டு விசையாகும்!*

*பிறகு அவர், “உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்” என்று சொன்னார் (6:11). இப்படிப்பட்டவர்கள் இரட்சிக்கப்படக் கூடுமா? விபச்சாரக்காரரும், திருடரும், வெறியரும், சுய புணர்ச்சிக்காரரும் பரலோகத்துக்குப் போக முடியுமா? நமக்கு பாவிகளிலேயே மிகவும் மோசமான பாவியை இரட்சிக்க தேவனுடைய கிருபை போதியளவுக்கு பெரிதாக இருக்குமா இருக்காதா என்றோ, அல்லது கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தம் அப்படிப்பட்ட பாவங்களை சுத்திகரிக்கும் வல்லமை பெற்றதா இல்லையா என்றும் எப்போதாவது கேள்வி எழும்பியிருக்குமானால், மேலே குறிப்பிட்ட வசனப் பகுதி அந்த கேள்விகளுக்கெல்லாம் நிறைவான பதிலைக் கொண்டுள்ளது. பதில் “ஆம்!” என்பது தான். மிகக் கொடூரமான பாவியும் கூட இரட்சிக்கப்படக் கூடும்.*

**“தேவன் உங்களைக் ‘கழுவி’ ‘பரிசுத்தமாக்கி,’ நீதிமான்களாக்கியிருக்கிறார்!”**

*கொரிந்தியர்கள் இரட்சிக்கப்பட்டது போலவே பாவிகள்*

இன்றைக்கும் இரட்சிக்கப்பட முடியும். பவுல், "உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்; பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று சொன்னார் (6:11). பாவிகளிலேயே மிகவும் மோசமான பாவிகள் கூட கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப் பட்டு இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்க முடியும்! கொரிந்து பட்டணத்திலிருந்த சபையார் பாவமன்னிப்பிற்கென்று கிறிஸ்துவுக்குள்ளாக, விசுவாசித்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றபோது, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே கழுவப்பட்டார்கள் (நடபடிகள் 18:8; 22:16; எபேசியர் 5:26). அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு அல்லது தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டபோது, அவர்கள் பரிசுத்தமானார்கள். அதே நேரத்தில் நீதிமான்களாக்கப் பட்டார்கள் அல்லது தேவனோடு சரி செய்து கொண்டார்கள்.

அவர்கள் முன்பு எப்படியிருந்தார்கள் என்பதை ஏன் பவுல் நினைப் பூட்டினார்? பரலோகத்திற்குள் சேரவிடாதபடிக்கு தடுக்கும் அக்கிரம செயல்களைத் தவிர்த்து விடும்படியான தூண்டுதலைக் கொடுக்க அவர் விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. மேலும், ஒரு கிறிஸ்தவனுக்கு ஏற்காத நடத்தையை தவிர்க்க வேண்டி அவர்களுடைய முந்தின நடக்கைக்குரியவைகளை நினைப் பூட்டியிருக்கலாம். அவர் "உங்களில் சிலர் அப்படிப்பட்டவர்*களாயிருந்தீர்கள்*" - என்று கடந்த காலத்தில் குறிப்பிடுவதால் இனியும் அப்படிப் பட்டவர்களாயிருக்க வில்லை என்பதை தெளிவுபடுத்துகிறார். கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப் பட்டவர்களாய் நீதியுள்ளவர்களாய் வாழும்படி உற்சாகமளிக்கிறார்.

இந்த சகோதரர்கள் யாராக இருந்தார்கள், இப்பொழுது யாராக இருக்கிறார்கள் என்பதை சிந்தித்து நீதியுள்ள வாழ்க்கையை வாழும்படி ஊக்கமளிக்கப்படுகிறார்கள். அதே போல், ஒரு காலத்தில் நாம் யாராக இருந்தோம் என்ற பழைய நினைவுகளும், இப்பொழுது நாம் என்னவாக இருக்கிறோம் என்கிற மாறுபட்ட சிந்தனைகளும், பாவம் செய்வதை தவிர்க்கவும் நீதியைச் செய்யவும் நமக்கு தூண்டுகோலாக இருக்கக் கூடும்.

## வேசித்தனம் செய்தல்

1 கொரிந்தியர் 6:12-20ல், பவுல் கிறிஸ்தவர்கள் தவிர்க்கவேண்டிய ஒரு அக்கிரமச் செயலைக் குறித்து இன்னும் சொல்ல வேண்டியிருந்தது.

"வேசித்தனம் செய்வது, ஒழுக்கக் கேடான குற்றம்," அது "நீங்கள் யாருடையவர்களோ அவருடைய நாமத்தை - கர்த்தருடைய நாமத்தை - அவமதிப்பதாகும். உங்கள் சரீரம் அவருக்குச் சொந்தமானது என்று பவுல் போதித்தார்.

வசனங்கள் 9, 10ல் பவுல் பட்டியலிடும் பாவங்களில், அவர் ஒரு பாவத்தை மட்டும் - வேசித்தனம் அல்லது ஒழுக்கக்கேடு - ஒருமுகப்படுத்தி அந்த அதிகாரத்தின் பின் பகுதி முழுவதும் எழுதுகிறார். ஏன்? ஏனெனில் பாலியல் ஒழுக்கக் கேடுதான் கொரிந்துவில் மிகப் பெரிய பிரச்சனையாக இருந்திருக்கலாம். ஒரு தனி மனிதனின் வெளிப்படையான ஒழுங்கீனச் செயலும், சபை அதை அனுமதிப்பது போல நடந்து கொண்டதும் இதற்கு ஆதாரமாக இருக்கிறது

(அதிகாரம் 5). சபை அங்கத்தினர்கள் ஒரு காலத்தில் குற்றவாளிகளாயிருந்த அனைத்துப் பாவங்களையும் விட்டு விலக வேண்டியவர்கள்; ஆனால், குறிப்பாக, இங்கே பவுல் சகோதரர்களிடம், "வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்" என்று புத்தி சொன்னார் (6:18).

### ஆட்சேபனைக்கு பதில்கள்

பவுல் கொரிந்தியர்களை, "வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்" என்று சொல்வதற்கு முன்பு, தன்னுடைய கருத்தின் நோக்கத்திற்கு எதிர்ப்பு வரக் கூடும் என்ற எதிர் பார்ப்பில் அப்படிக் குறிப்பிட்டார். அவர் மூன்று கருத்துக்களைத் தெரியப்படுத்தி. அவைகளுக்குப் பதில் விளக்கத்தையும் கொடுக்கிறார். இவைகள் பவுலுடைய சொந்தக் கருத்துக்களல்ல; வேசித்தனம் பண்ண தங்களுக்கு "உரிமை" இருப்பது போல சிலர் எண்ணங் கொண்டிருந்ததால் அவர்களின் கருத்தையே பவுல் குறிப்பிடுகிறார். அவைகள் மேற்கோளாகச் சுட்டிக் காட்டப்படவேண்டியது.[5] பவுல் வேசித்தனம் செய்வோரின் குரலாக அல்லது தங்களை நியாயப்படுத்திக் கொள்வோரினிமித்தமாக, பவுல் அவர்களைக் கடிந்து கொண்டு அவர்களின் எண்ணங்களை வெளியிடுகிறார்.[6]

*முதலாவதாக, வேசித்தனம் செய்வது தங்களுடைய உரிமை என்று நம்பினவர்கள், "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" என்று கூறிக்கொண்டிருந்தனர்* (6:12அ). அடிப்படையில், "நான் விரும்பினால் வேசித்தனம் பண்ண என்னால் முடியும்," என்று குறிப்பிடுகின்றனர்.[7] பவுலின் பதில்: "எல்லாம் தகுதியாயிராது. இந்தப் பாவச் செயல்கள் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப் பட்டாலும் கூட எல்லாம் தகுதியாயிராது."

*இரண்டாவதாக, அவரின் உரிமை கோரிக்கையை மறுபடியும் குறிப்பிட்டு: "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு"* என்று கூறிக்கொண்டிருந்தனர் (6:12ஆ) என்றார். பிறகு பதிலளித்து, "சிலவற்றை அனுபவிக்க எனக்கு அதிகாரம் இருந்த போதும், நான் எதற்கும் அடிமைப்பட மாட்டேன்" என்று சொல்லுகிறார். உண்மையில், பாவம் பாவியை அடிமையாக்குகிறது. வேசித்தனக் குற்றத்தைச் செய்கிறவனை நிச்சயமாக அது அடிமையாக்குகிறது.

*மூன்றாவதாக, ஒழுக்கக் கேடானவர்கள் பின் வருவதை குறிப்பால் உணர்த்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுகிறார், "போஜனத்துக்கு வயிறும் வயிற்றுக்கு போஜனமும் ஏற்கும்"* (6:13). இந்த வாக்குமூலம் ஒரு வேளை குறிப்பிட்ட சில உணவுகளைப் புசிப்பது குறித்துப் பேசினாலும் (அதிகாரம் 8-10), "தேவன் எங்களுக்கு இந்த உடம்புகளை கொடுத்திருக்கிறார், எனவே நாங்கள் விரும்புகிறபடியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றெல்லாம் அவர்கள் வாதிடுவது வழக்கமாக இருந்துள்ளது போல் தோன்றுகிறது. "பாலியல் இன்ப ஆசைக்கு அவைகளைப் பயன்படுத்துவது தவறில்லை" என்று கூறியிருக்கலாம். இதற்கு விளக்கம் அளிக்கும் பவுல், தேவன் ஒரு நாளில் போஜனத்தையும் சரீரத்தையும் அழிப்பார்; சரீரம் கர்த்தருக்கு சொந்தமானது மற்றும் சரீரமானது தேவனால் உயிர்ப்பிக்கப்படும் (6:13ஆ, 14) என்றார்.

### வேசித்தனத்தை தவிர்க்க வேண்டியதன் காரணம்

நாம் கர்த்தருக்குரியவர்களானதால், நாம் விரும்புகிறபடியெல்லாம்

நம்முடைய சரீரத்தைப் பயன்படுத்த நாம் அனுமதிக்கப் படவில்லை என்று பவுல் அறிவுறுத்துகிறார். நிச்சயமாக நாம் அவைகளை ஒழுக்கமற்ற காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடாது (6:15-20). ஒரு கிறிஸ்தவன் ஒரு வேசியோடு பாலுறவு கொள்வது தவறு ஏனெனில் அவன் கிறிஸ்துவுக்கு சொந்தமானவன். கிறிஸ்துவின் சரீரத்துடன் வேசியின் சரீரத்தில் பங்கு கொள்வது, நிச்சயமாக கிறிஸ்தவனுக்கேற்காத நடத்தையாகும்!

பவுல் தன்னுடைய வாசகர்களிடம் இது குறித்து மூன்று கேள்விகளைக் கேட்டு விவாதிக்கிறார்: (1) கர்த்தருடைய அவயவங்களைக் கொண்ட சரீரத்தை வேசியின் அவயவங்களாக்கலாமா (6:15)? இல்லை! உண்மையில் ஒரு விபச்சாரியுடன் ஒரு கிறிஸ்தவன் வேசித்தனம் பண்ணும் போது, அவனும் விபச்சாரத்துக்கு பங்குள்ள குற்றவாளியாகிறான், அவன் கிறிஸ்துவுடன் தன்னை ஆவிக்குரிய ஐக்கியத்தில் இணைத்துக் கொண்ட பிறகு, விபச்சாரியுடன் தன் சரீரத்தை இணைப்பதால் அப்படியாகிறான் (6:16, 17). (2) நமது சுய சரீரத்துக்கு விரோதமாய் பாவஞ் செய்யலாமா? இல்லை. நமது சரீரங்கள் கர்த்தருக்குரியவைகளானதால், வேசித்தனம் செய்வது அவருக்கும் நம்முடைய சொந்த சரீரத்துக்கும் விரோதமான பாவம் (6:18). (3) தேவன் வாசம்பண்ணுகிற இடமான தேவனுடைய ஆலயத்தை, பாவத்துக்குரியதாக்கலாமா? இல்லை! நம்முடைய சரீரம் கர்த்தருக்குரியதானதால், அவைகளில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார் (6:19).[8] நிச்சயமாக, அப்படியானால் நாம் "ஒழுக்க கேடானவைகளுக்கு விலகி ஓட வேண்டும்."

இந்த நினைவில்கொள்ளும் வார்த்தைகளோடு பவுல் இந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார்: கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே: "ஆகையால் உங்கள் சரீரத்தினாலே . . . தேவனை மகிமைப்படுத்துங்கள்."[9] நம்மை மீட்கும்படி கிறிஸ்து கொடுத்த கிரயம் அவருடைய சொந்த இரத்தம், நமது பாவங்களுக்காக அதை அவர் சிந்தினார் (1 பேதுரு 1:18, 19). இதன் விளைவாக, நமது சரீரங்களினாலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வோமானால், நம்முடைய நடத்தை கிறிஸ்தவனுக் கேற்றதாக இருக்கும். அதற்கு முரணாக, ஆவியானவர் வாசம் பண்ணுகிற சரீரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வேசித்தனத்தில் ஈடுபடுவோமாகில், நாம் கிறிஸ்தவனுக்கேற்காத நடத்தைகளையுடையவர்களென்று குற்றப்படுத்தப் பட்டவர்களே.

## முடிவுரை

கொரிந்து சபையைப் போலவே இன்றைய சபைகள் ஒழுங்கீனச் சூழலில் இருந்து கொண்டுள்ளன. பிரசித்தி பெற்ற கேளிக்கை நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கற்ற செயல்களை உற்சாகப் படுத்துகின்றன. ஜனங்கள் பொதுவாகவே வேசித்தனம் பண்ண எதிர்பார்க்கப்படுகின்றனர். தூய்மையைக் காத்து வாழ்வது நகைப்புக்குரிய பரியாசமாய்த் தோணுகிறது. இப்படிப் பட்ட ஒழுங்கீனச் சூழ்நிலையில், தனிநபர்த் தூய்மையின் அவசியத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் இருக்க வேண்டும் என்பதை சபை வலியுறுத்த வேண்டும். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் *அவர்கள் என்னவாக* - தேவனுடைய குடும்பமாக - இருக்கிறார்கள் என்பதால்; *அவர்கள் யாராக இருக்கிறார்கள்* - பாவியாக இருந்து கழுவப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள் என்பதால்; *அவர்கள் யாருடையவர்களாயிருக்கிறார்கள்* - கிறிஸ்துவுக்

குரியவர்களாயிருக்கிறார்கள் என்பதால்; தவறான நடத்தைகளைத் தவிர்க்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஒழுக்கமுள்ள ஜீவியத்தை வலியுறுத்துவதால், அதிகாரம் 5ல் சம்பந்தப் பட்ட கொரிந்துப் பட்டணத்து சபையின் பிரச்சனையை இன்றைய சபை தவிர்க்க முடியும். அப்பொழுது அங்கத்தினர்களின் ஒழுங்கற்ற நடத்தைகளுக்காக அவிசுவாசிகள் சபையை குற்றப்படுத்திப் பேச வாய்ப்பிருக்காது. சபை எந்த அளவுக்கு தனது விசுவாசத்தைக் குறித்து வினயமுள்ளதாக இருக்கிறதோ, எந்த அளவுக்கு தனது தூய்மைக்காக வினயமாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு புறம்பேயிருந்து ஆவிக்குரிய உதவியைத் தேடிக் கொண்டுள்ளவர்களை கவர்ந்திழுக்கும் திறமையைப் பெறும்.

---

குறிப்புகள்

[1]இதைப் போன்றதொரு கருத்து Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrikson Publishers, 1999), *132ல் வழங்கப் பட்டுள்ளது.* [2]*6:1ல் குறிப்பிடப்பட்டுள்ள அநீதிக்காரன் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும் - கிறிஸ்தவர்களுக்கு முரணாக, நீதிமான்களாக்கப்படாதவர்கள். பவுல் இங்கே சமுதாயச் சட்ட நீதிமன்றங்களைக் குறிப்பிடுகிறார்.* [3]*பவுல் 6:4, 6ல் "இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகளை," தீர்ப்பு செய்ய அவிசுவாசிகளுக்கு முன்பாக - "சபையில் சம்பந்தமில்லாதவர்களுக்கு முன்பாக" - அஞ்ஞானிகளுக்கு முன்பாக என்கிறார். எப்படியாயினும், இந்த வாக்கியம் கேள்வியாக இராமல் சொற்றொடராக இருந்திருக்க வேண்டும், பவுல் சபையில் செல்வாக்கில்லாத அங்கத்தினர்களை குறிப்பிட்டிருக்க வேண்டும், வாக்கியமோ கேள்வியோ குற்றச்சாட்டாக கேட்கப்பட்டிருக்கலாம்.* [4]*6:1ல் பயன்படுத்தப் பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தை "அநீதிமான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ("அநீதிகாரன்";* KJV*).* [5]*மேற்கோள் குறிப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில்* NRSV *மற்றும் இதர மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [6]*எதிர்ப்பாளர்கள் பவுலின் சொந்த வார்த்தைகளையே அவருக்கு விரோதமாய் பயன்படுத்தியிருக்கலாம், வேறொரு வசனப் பகுதியில் பவுல் "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு," "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்," போன்ற வாக்கியங்களைப் போதித்திருக்கலாம். அப்படியிருந்திருக்குமானால், அந்த வசனப் பகுதியிலிருந்து பவுலின் வார்த்தைகளை அவர்கள் சந்தர்ப்ப பொருளுக்கு வெளியே பயன்படுத்தியிருக்கலாம்.* [7]*அவர்கள் "எல்லாவற்றுக்கும் அதிகாரமுண்டு" என்ற வாக்கியத்தில் சுதந்திரமான நம்பிக்கை கொண்டிருந்திருக்கலாம். எப்படியாயினும், அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு அவர்களுடைய சுதந்திரம் பாவ செயல்களைச் செய்ய அங்கீகாரம் கொடுத்தது என நம்பினர்.* (Soards, 131.) [8]*"பவுல் முன்பு சபை பரிசுத்த ஆவி வாசம் பண்ணும் ஆலயம் என்பதை குறிப்பிட்டு உறுதிப் படுத்தினார்* [*3:16, 17*] *என்பதையே இங்கு தனிப்பட்ட ஒவ்வொரு சபை விசுவாசிக்கும் பொருந்தும்"* (Coffman, 92-93). [9]*சோர்ட்ஸ், 6:19, 20ல் குறிப்பிடப்பட்டுள்ள "சரீரம்" இன்னமும் சபையைக் குறிக்கக் கூடியதாயிருக்கிறது என்று நம்பினார், இந்த வசனங்களில் சொல்லப்படும் பிரதி பெயர்ச்சொற்களெல்லாம் பன்மையில் சொல்லப்பட்டுள்ளது.* (Soards, 133-34.) *பன்மை பெயர்ச் சொற்கள் எல்லாம் வலியுறுத்துவதற்காக பவுல் ஏற்கனவே கொரிந்து சபை ஒவ்வொரு தனி அங்கத்தினர்களைக் குறித்து சொன்னது உண்மையாயிருக்கிறது.*